தமிழ்நாடு மின்பகிர்மானக் கழகம்
(நிர்வாகக் கிளை)

அனுப்புநர்
பொறிஞர், மு.அம்பிகா, பி.இ.,
தலைமைப் பொறியாளர்/பணியமைப்பு,
144. அண்ணா சாலை,
சென்னை – 600 002.

பெறுநர்
அனைத்து தலைமைப் பொறியாளர்கள்,
அனைத்து மேற்பார்வைப் பொறியாளர்கள்.

கடித எண்.027722/ஜி4/ஜி41/2025, நாள்: 23.10.2025.

ஐயா,

பொருள்: நிர்வாகம் - இளநிலை பொறியாளர்/ மின்னியல் /இரண்டாம் நிலை பணியாளர்கள் - மாற்றுவழி உத்தரவு (Diversion Order) – இரத்து செய்வது – குறித்து – அறிவுறுத்தல் வழங்குவது – தொடர்பாக.

இளநிலை பொறியாளர்/ மின்னியல்/இரண்டாம் நிலை பணியாளர்கள் பல்வேறு வட்டங்களில் அவர்களுக்குரிய முறைப் பணியிடங்களில் (Shift duties) ஈடுபடுத்தப்படாமல், அலுவலக பணிகளில் மாற்றுவழி (Diversion Order) உத்தரவின் வாயிலாக பணியமர்த்தப்பட்டு பணிபுரிந்து வருவதால், கோட்டங்களில் உள்ள முறைப்பணிகள் மிகவும் பாதிக்கப்படுகிறது எனவே அனைத்து தலைமைப் பொறியாளர்கள் மற்றும் மேற்பார்வைப் பொறியாளர்கள் கீழ்க்கண்ட அறிவுரைகளை உடனடியாக செயல்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

| | |
|---|---|
| 1. | இளநிலை பொறியாளர்/இரண்டாம் நிலை / மின்னியல் பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட மாற்றுவழி உத்தரவுகள் (Diversion Orders) அனைத்தையும் உடனடியாக இரத்து செய்து அவர்களின் சொந்த பணியிடங்களுக்கே திருப்பி அனுப்பப்பட வேண்டும். |
| 2. | மேற்கண்ட அறிவுரையினை கவனத்தில் கொள்ளாத பட்சத்தில் வேறு ஏதேனும் அசம்பாவிதங்கள் ஏற்பட்டால் சம்பந்தப்பட்ட அலுவலர்களே பொறுப்பேற்க நேரிடும். |

--2

| | |
|---|---|
| 3. | மேற்கண்ட அறிவுறுத்துதலின்படி ஏற்கனவே வழங்கப்பட்ட இளநிலை பொறியாளர்/மின்னியல் / இரண்டாம் நிலை பணியாளர்களின் மாற்றுவழி உத்தரவுகளை (Diversion Order) இரத்து செய்ததற்கான அறிக்கையை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு ஏழு நாட்களுக்குள் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. |

23/X/25

(மு.அம்பிகா)
தலைமைப் பொறியாளர்/பணியமைப்பு

2/3

நகல் - இயக்குநர் / பகிர்மானம் / தமிழ்நாடு மின்பகிர்மானக் கழகம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

நகல் - இருப்புக் கோப்பு